TNVR150002012024
Presented on : 26-01-2024
Registered on : 27-02-2024
Decided on : 10-06-2026
Duration : 2 years, 4 months, 15 days

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : செல்வி.D.ஜெயபிரதா, B.A.,B.L., (Hons)**

**நீதித்துறை நடுவர், அருப்புக்கோட்டை**

**2026 -ம் வருடம் ஜுன் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.35/2024**

******

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையம்,
குற்ற எண். 109/2023 ... புகார்தாரர்
பிரிவுகள்.294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act

**-எதிர்-**

குருநாதன், (37/2026)
த/பெ. மொட்டை இருளாண்டி,
902-சி-ஜெயம் கார்டன், கட்ட கஞ்சம்பட்டி,
ஆத்திப்பட்டி, அருப்புக்கோட்டை தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...எதிரி

**வழக்கு விசாரணை விவரங்கள்**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021-ன் படி)

| | | |
|---|---|---|
| i. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | எதிரி 08.11.2023 ம் தேதி முதல் 10.11.2023 வரை 3 நாட்கள் சிறையில் இருந்துள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| ii. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 27.02.2024 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 27.12.2024 |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | U/S. 320(ii) Crpc ன் கீழ் 02.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.<br>U/S. 311 Crpc ன் கீழ் 03.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விவரம் | : | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 02.06.2026 | 02.06.2026 |
| அ.சா.2 | 02.06.2026 | 02.06.2026 |
| அ.சா.3 | 02.06.2026 | 02.06.2026 |
| அ.சா.4 | 03.06.2026 | 03.06.2026 |

| | | | |
|---|---|---|---|
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 08.06.2026 |

viii. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) : இல்லை

ix. மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் : இல்லை

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106(1)-ன் படி விபரங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.எண். | : | CC 35/2024 |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண். 109/2023 |
| 3. | **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்** | | |
| | பெயர் | : | குருநாதன், (37/2026)<br>த/பெ. மொட்டை இருளாண்டி,<br>902-சி-ஜெயம் கார்டன், கட்ட கஞ்சம்பட்டி,<br>ஆத்திப்பட்டி, அருப்புக்கோட்டை தாலுகா,<br>விருதுநகர் மாவட்டம். |
| | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| | தொழில் | : | |
| | இருப்பிட முகவரி | : | |
| | வயது | | |
| 4. | குற்ற நிகழ்வு | : | 27.06.2023 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 27.06.2023 |

| | | | |
|---|---|---|---|
| 6. | கைது செய்யப்பட்டது | : | 08.11.2023 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 10.11.2023 |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 02.06.2026 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 08.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 10.06.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |

இவ்வழக்கானது கடந்த 27.02.2024 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 08.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.2. அருப்புக்கோட்டை திரு.செந்தில் குமார் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.சுப்பையா, B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், செய்த வாதங்களையும் கேட்டறிந்து, சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்ருமாறு

இவ்வழக்கின் எதிரி குருநாதன், புகார்தாரர் அழகேஸ்வரியின் அக்கா மாப்பிள்ளை

ஆவார், புகார்தாரர் காதல் திருமணம் செய்து கொண்டது பிடிக்காமல் எதிரி புகார்தாரரை பார்க்கும் இடங்களிலெல்லாம் அசிங்கமாகத் திட்டி, சாடை பேசி வந்துள்ளதாகவும், கடந்த 27.06.2023 ம் தேதி பகல் சுமார் 03.10 மணிக்கு காந்தி நகர் ராஜ்கோ சூப்பர் மார்க்கெட் பக்கத்தில் இருக்கும் பெட்ரோல் பல்க்கில் புகார்தாரர் பெட்ரோல் போட்டு விட்டு கிளம்பும் போது அங்கு சென்ற எதிரி குருநாதன் புகார்தாரரை பார்த்து பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து வண்டில வக்கீல் ஸ்டிக்கர் ஒட்டியிருந்தா நீ என்ன பெரிய புண்டையான்னு புகார்தாரரை அசிங்கமாகத் திட்டி புகார்தாரருக்கு மனஉளச்சலை ஏற்படுத்தியதோடு, இந்த விசயத்தை புகார்தாரர், எதிரியின் மனைவியான புகார்தாரரின் அக்காவிடம் சொல்லலாம் என்று அவரது அக்காவின் வீட்டிற்கு போய் எதிரியை கண்டித்து வைக்கும் படி சொல்லிவிட்டு புகார்தாரர் அன்று மதியம் சுமார் 03.20 மணிக்கு அங்கிருந்து கிளம்பி வந்த போது எதிரி குருநாதன் அவர் ஓட்டி வந்த குட்டியானையில் புகார்தாரரிடம் வந்து புகார்தாரரை பார்த்து ஏன்டி தேவிடியா என் வீட்ல சொல்லி அங்கேயும் சண்டையிழுத்து விடுறியான்னு கேட்டு கீழே கிடந்த கம்பால் புகார்தாரரின் இடது முழங்கால், இடது உள்ளங்கை ஆகிய இடங்களில் அடித்து புகார்தாரருக்கு சிறு காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரின் தலையில் கையால் அடித்தும், புகார்தாரரை ஏன்டி தேவிடியா காதல் திருமணா செய்யுறே உன்னைக் கொன்றால் தாண்டி என் ஆத்திரம் அடங்கும் என்றும், மேலும் புகார்தாரரை பார்த்து இன்னிக்கு தப்பிச்சுட்டே என்னிக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் தான்னு சொல்லி கொலைமிரட்டல் செய்து புகார்தாரருக்கு உயிர் பயத்தை

ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 506(i) இதச உ/இ 4 of TNPHW Acts ன் கீழ் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு கோப்பிற்கு எடுத்த உத்தரவு**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்ளை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் எதிரி முன்னிலை ஆனதும் வழக்காவணங்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனையதல்**

போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியிடம் குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள் இருந்ததாலும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973-ன் பிரிவு 240 (1) படி எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் 1860-ன் **சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act ன்** கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 240(2) ன் படி எதிரிக்கு தமிழில் விளக்கிக் கேட்டபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதால் குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 242 ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 அழகேஸ்வரி அவரது சாட்சியத்தில், எதிரி அவருடைய அக்காவின் கணவர் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காந்தி நகரில் உள்ள பெட்ரோல் பல்க்கிற்கு பெட்ரோல் போடுவற்காக சென்றிருந்த போது கூட்டமாக யாரோ சண்டை போட்டு கொண்டிருந்ததாகவும், அதில் அவரது மாமாவான எதிரியும் இருந்ததாகவும், கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், எதிரி தான் அவரை தள்ளிவிட்டார் என்று நினைத்து கொண்டு அவர் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும், பின்னர் அவர் தள்ளிவிடவில்லை என்று தெரிந்து கொண்டதாகவும், அவருக்கும் எதிரிக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானம் ஆகிவிட்டதாகவும், புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரி மீது இருந்த கோபத்தில் அவ்வாறு புகார் கொடுத்துவிட்டதாகவும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 முருகன் அவரது சாட்சியத்தில், அ.சா.1 அழகேஸ்வரி அவரது தம்பி மனைவி என்றும், எதிரி அழகேஸ்வரியின் அக்காவின் கணவர் என்றும், அவர்கள்

இருவருக்குள்ளும் என்ன பிரச்சனை என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.3 ராஜேந்திரன் அவரது சாட்சியத்தில், பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்தை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு அவரது நண்பருடன் தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்ததாகவும், அவர் முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.4 பரமசிவம் (சார்பு ஆய்வாளர்), கடந்த 27.06.2023 ம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் சந்திரமோகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று, புகார்தாரர் கொடுத்த புகார்மனுவினை பெற்று குற்ற எண். 109/2023 சட்டபிரிவுகள் 294(b), 323, 342, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் விசாரணை வேண்டி வழக்கின் கோப்புகளை சார்பு ஆய்வாளர் அரங்கநாதன் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளதாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் அரங்கநாதன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் சம்பவ இடம் சென்று

சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், பின்னர் விசாரணையில் எதிரி குருநாதன் புகாரில் கூறியுள்ளவாறு அ.சா.1 ஐ போஸ்ட் கம்பத்தில் கட்டி வைக்கவோ, வேனை வைத்து ஏற்றி கொல்ல முயற்சி செய்யவில்லை என்று தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 342, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act லிருந்து 294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளதாகவும், பின்னர் 29.08.2023 ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட அழகேஸ்வரிக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் அண்ணாதுரை அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றதாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்த பிறகு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1) (ஆ) ன் படி வினவிய போது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. இவ்வழக்கின் எதிரி குருநாதன், புகார்தாரர் அழகேஸ்வரியின் அக்கா மாப்பிள்ளை ஆவார், புகார்தாரர் காதல் திருமணம் செய்து கொண்டது பிடிக்காமல் எதிரி புகார்தாரரை பார்க்கும் இடங்களிலெல்லாம் அசிங்கமாகத் திட்டி, சாடை பேசி வந்துள்ளதாகவும், கடந்த 27.06.2023 ம் தேதி பகல் சுமார் 03.10 மணிக்கு காந்தி நகர் ராஜ்கோ சூப்பர் மார்க்கெட் பக்கத்தில் இருக்கும் பெட்ரோல் பல்க்கில் புகார்தாரர் பெட்ரோல் போட்டு விட்டு கிளம்பும் போது, அங்கு சென்ற எதிரி குருநாதன் புகார்தாரரை பார்த்து பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து வண்டில வக்கீல் ஸ்டிக்கர் ஒட்டியிருந்தா நீ என்ன பெரிய புண்டையான்னு புகார்தாரரை அசிங்கமாகத் திட்டி புகார்தாரருக்கு மனஉளச்சலை ஏற்படுத்தியதோடு, மேற்படி சம்பவத்தை புகார்தாரர், அவருடைய அக்காவான எதிரியின் மனைவியிடம் சொல்லலாம் என்று அவரது அக்காவின் வீட்டிற்கு சென்றுவிட்டு, திரும்பி மதியம் சுமார் 03.20 மணிக்கு அங்கிருந்து கிளம்பி வந்த போது, எதிரி குருநாதன் அவர் ஓட்டி வந்த குட்டியானையில் புகார்தாரரிடம் வந்து புகார்தாரரை பார்த்து ஏன்டி தேவிடியா என் வீட்ல சொல்லி அங்கேயும் சண்டையிழுத்து விடுறியான்னு கேட்டு கீழே கிடந்த

கம்பால் புகார்தாரரின் இடது முழங்கால், இடது உள்ளங்கை ஆகிய இடங்களில் அடித்து புகார்தாரருக்கு சிறு காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரின் தலையில் கையால் அடித்தும், புகார்தாரரை ஏன்டி தேவிடியா காதல் திருமணா செய்யுறே உன்னைக் கொன்றால் தாண்டி என் ஆத்திரம் அடங்கும் என்றும், மேலும் புகார்தாரரை பார்த்து இன்னிக்கு தப்பிச்சுட்டே என்னிக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் தான்னு சொல்லி கொலைமிரட்டல் செய்து புகார்தாரருக்கு உயிர் பயத்தை ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

11. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 அழகேஸ்வரி அவரது சாட்சியத்தில், எதிரி அவருடைய அக்காவின் கணவர் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காந்தி நகரில் உள்ள பெட்ரோல் பல்க்கிற்கு பெட்ரோல் போடுவற்காக சென்றிருந்த போது கூட்டமாக யாரோ சண்டை போட்டு கொண்டிருந்ததாகவும், அதில் அவரது மாமாவான எதிரியும் இருந்ததாகவும், கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், எதிரி தான் அவரை தள்ளிவிட்டார் என்று நினைத்து கொண்டு அவர் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும், பின்னர் அவர் தள்ளிவிடவில்லை என்று தெரிந்து கொண்டதாகவும், அவருக்கும் எதிரிக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்கள் சமாதானம் ஆகிவிட்டதாகவும், புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரி மீது இருந்த கோபத்தில் அவ்வாறு புகார் கொடுத்துவிட்டதாகவும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 முருகன் அவரது சாட்சியத்தில்,

அ.சா.1 அழகேஸ்வரி அவரது தம்பி மனைவி என்றும், எதிரி அ.சா.1ன் அக்காவின் கணவர் என்றும், அவர்கள் இருவருக்குள்ளும் என்ன பிரச்சனை என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

13. இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.3 ராஜேந்திரன் அவரது சாட்சியத்தில், பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்தை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு அவரது நண்பருடன் தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்ததாகவும், அவர் முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என பிற பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு தற்போதைய சார்பு ஆய்வாளர் அ.சா.4 பரமசிவம் விசாரிக்கப்பட்டுள்ளார்.

15. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் அ.சா.4 விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்த தற்போதைய சார்பு ஆய்வாளரின்

சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேலும் இவ்வழக்கில் புகார்தாரர்/பாதிக்கப்பட்ட சாட்சியான அசா.1 எதிரியுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 320(ii)ன் கீழ் மனுதாக்கல் செய்துள்ளார். ஆனால் இவ்வழக்கில் உள்ள குற்றப்பிரிவுகள் சமாதானம் செய்ய இயலாத குற்றப்பிரிவுகள் என்பதனால் மேற்படிமனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒப்பிட்டு பரிசீலிக்கும் போது முரண்பாடு ஏற்படுவதாலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2. எதிரிக்கு எதிராக எந்த ஒரு சாட்சியமும் அளிக்காதபட்சத்தில் அரசு தரப்பு வழக்கின் மீது தோன்றும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. முடிவாக, **எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால், எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

18. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரி

தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 10 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,
அருப்புக்கோட்டை.

**பின் இணைப்பு :-**

**1) அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1. | அழகேஸ்வரி |
| அ.சா.2. | முருகன் |
| அ.சா.3. | ராஜேந்திரன் |
| அ.சா.4 | பரமசிவம் (சார்பு ஆய்வாளர்) |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார்மனு |
| அ.சா.ஆ.2. | பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.3. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4. | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.5. | மாதிரி வரைபடம் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.6. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

**3) அரசு தரப்பு சான்றுபொருட்கள்**

இல்லை

**4) எதிரி தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை.

**பின் குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |
| 2. | வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் செய்யவில்லை. |

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.